# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.897/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்துகிருஷ்ணன் | த–பெ | பாண்டி |
| ஊர்: | : | மீனாட்சிபுரம் | | |
| வயது: | : | 34/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் மீனாட்சிபுரத்தில் வசித்து தனியார் வேலை செய்து வருகிறேன். கடந்த 20.06.2018 அன்று கல்லல் இந்தியன் வங்கி அருகில் உள்ள எனது உறவினர் ஸ்டார் அழகு நிலைத்திற்கு சுமார் மாலை 5.00 மணியளவில் சென்றேன். அப்போது சம்பவ சாலையில் சம்பவ நேரத்தில் நாச்சம்மை என்ற பெண்மணி ஒருவர் நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது தட்சணமூர்த்தி என்ற நபர் சம்பவ நேரத்தில் TVS Star city இருசக்கர வாகனத்தில் வந்து நாச்சம்மை என்பவர் கழுத்தில் அணிந்திருந்த 9 பவுன் தங்க செயினை அறுத்து விட்டு சென்றுவிட்டார். இதனை நான், மணிகண்டன், புறா மணி ஆகியோர் பார்த்தோம். சற்று நேரத்தில் தட்சணாமூர்த்தியை கல்லல் போலீசார் பிடித்து விட்டார்கள். பின்னர் அவரை காவல் நிலையம் அழைத்து சென்று அவரை விசாரணை செய்தார்கள். சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் மேற்படி விபரங்களை நான் சொன்னேன். சம்பவம் நடந்தது பல வருடங்கள் ஆகிவிட்டதால் மேற்படி தட்சணாமூர்த்தி என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் தற்சமயம் நினைவில் இல்லை. தட்சணாமூர்த்தி என்பவரை பார்த்தால் அடையாளம் தெரியும்.

குறுக்கு விசாரணை

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் என்ன என்றால் மாலை 05.00 மணிக்கு நடந்தது. சம்பவம் நடந்த சமயத்தில் நான் பியூட்டி பார்லர் பெயரை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார்மனுவிலோ போலீசார் விசாரணையிலோ திருடப்பட்டதாக சொல்லப்பட்ட நகையின் எடையினை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணையில் நகையின் மதிப்பை சொல்வது போலீசார் சொல்வதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால்

சரியல்ல. எதிரியை யார் யார் சேர்ந்து காவல் துறையினரிடம் ஒப்படைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் ,மணிகண்டன், புறாமணி ஆகியோர் ஒப்படைத்தோம். புறாமணி என்பவர் மீது ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் பல குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது அதனால் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவருடன் இணைந்து நானும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடைபெறவில்லை போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.18 10:18:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.